## அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
## *Ang Mo Kio Tamil Methodist Church*

**14th ஏப்ரல் / April 2024 ஞா யிறு ஆராதனை**

✝ ***ஆராதனைக்கு அழைப்பு*** — ***திரு. யோசுவா***
Call to Worship — Mr. Joshua

***இறைவணக்கப்பாடல்*** — ***பாடகர் குழு***
Introit — Choir

***ஜெபம்*** — ***திரு. யோசுவா***
Prayer — Mr. Joshua

✝ ***தொடக்க பாடல்*** — ***சபையார் இணைந்து***
Opening Song — Congregation

***என் மீட்பர் ரத்தம் சிந்தினார்***

*1. என் மீட்பர் ரத்தம் சிந்தினார்*
*மா நீதியும் சம்பாதித்தார்*
*என் சொந்த நீதி வெறுத்தேன்,*
*இயேசுவின் நாமம் நம்புவேன்;*
*நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான்.*
*வேறஸ்திபாரம் மணல்தான்.*

*2. கார் மேகம் அவர் முகத்தை*
*மறைக்கும் காலம் அவரை*
*எப்போதும்போல நம்புவேன்,*
*மாறாதவர் என்றறிவேன்;*
*நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான்.*
*வேறஸ்திபாரம் மணல்தான்.*

*3. மரண வெள்ளம் பொங்கினும்,*
*என் மாம்சம் சோர்ந்துபோயினும்.*
*உம் வாக்குத்தத்தம் ஆணையும்*
*என் நெஞ்சை ஆற்றித் தேற்றிடும்;*
*நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான்,*
*வேறஸ்திபாரம் மணல்தான்.*

*4. நியாயத் தீர்ப்புக் காலத்தில்*
*எக்காள சத்தம் கேட்கையில்*
*அஞ்சேன், என் மீட்பர் நீதியே*
*அநீதன் என்னை மூடுமோ;*
*நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான்,*
*வேறஸ்திபாரம் மணல்தான்.*

✝ ***மாறி வாசித்தல் 15ம் ஞாயிறு*** — ***சபையார் இணைந்து***
***"சங்கீதம் 40"*** — Congregation

"நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டு"

Psalter Reading "Psalm 40"

✝ ***தந்தை போற்றி*** — ***சபையார் இணைந்து***
Gloria Patri — Congregation

***துதி ஆராதனை***
Singspiration

***ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Thanksgiving & Pastoral Prayer — Rev. Vijay Joseph

***பரமண்டல ஜெபம்*** — ***சபையார் இணைந்து***
Lord's Prayer — Congregation

✝ ***காணிக்கை பாடல்*** — ***சபையார் இணைந்து***
Offertory Song — Congregation

***காக்கும் கரங்கள் உண்டெனக்கு***

*1. காக்கும் கரங்கள் உண்டெனக்கு*
*காத்திடுவார் கிருபையாலே*
*அல்லேலூயா பாடிப் பாடி*
*அலைகளை நான் தாண்டிடுவேன்*

**நம்புவேன் இயேசுவை (4)**

*2. நிந்தனைகள் போராட்டம் வந்தும்*
*நீதியின் தேவன் தாங்கினாரே*
*நேசக் கொடி என் மேல் பறக்க*
*நேசருக்காய் ஜீவித்திடுவேன்*

*3. கன்மலைகளை பெயர்க்கும்படியாய்க்*
*கர்த்தர் என்னைக் கரம் பிடித்தார்*
*காத்திருந்து பெலனடைந்து*
*கழுகு போல எழும்பிடுவேன்*

*4. அத்தி மரம் துளிர் விடாமல்*
*ஆட்டு மந்தை முதலற்றாலும்*
*கர்த்தருக்குக் காத்திருப்போர்*
*வெட்கப்பட்டுப் போவதில்லை*

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ ***திருமறைப் பாடம்*** — ***மிஸ். லீனா தனபாலன்***
***I கொரிந்தியர் 15 : 12 – 34*** — Miss. Leena Dhanapalan

Scripture Reading :
1 Corinthians 15:12 - 34

**அருளுரை** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Sermon — Rev. Vijay Joseph

**அர்ப்பணகீதம்** — ***சபையார் இணைந்து***
✝ Offertory & Closing Song — Congregation

**குதூகலம் நிறைந்த நன்னாள்**

**குதூகலம் நிறைந்த நன்னாள்**
**நடு வானில் மின்னிடுமே**
**இது வரை இருந்த துன்பமில்லை**
**இனி என்றுமே ஆனந்தம்,**

*1. தள கர்த்தனாம் இயேசு நின்று*
*யுத்தம் செய்திடுவார் நன்று*
*அவர் ஆவியினால் புது பெலனடைந்து*
*ஜெய கீதங்கள் பாடிடுவோம்*

*2. புவி மீதினில் சரீர மீட்பு*
*என்று காண்போம் என ஏங்கும்*
*மன மகிழ்ந்திடவே — அவர் வந்திடுவார்.*
*மணவாட்டியாய் சேர்ந்திடவே*

*3. ஜெப விழிப்புடன் வாஞ்சையாக*
*அவர் வருகையை எதிர்நோக்கி*
*நவ எருசலேமாய் தூய அலங்காரமாய்*
*நாம் ஆயத்தமாகிடுவோம்*

*4. ஜீவ ஒளி வீசும் கற்களாக*
*சீயோன் நகர் தனிலே சேர்க்க*
*அருள் சுரந்திருந்தார் நாமம் வரைந்திருந்தார்.*
*அவர் மகிமையில் ஆர்ப்பரிப்போம்*

**அறிவிப்புகள்**
Announcements

மனப்பாட வசனங்கள் — ***சபையார் இணைந்து***
✝ Weekly Memory Verses — Congregation
***I கொரிந்தியர் 15 : 20 – 21***
1 Corinthians 15:20 – 21

***20. கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து,***
***நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்.***

***21. மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால்***
***மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ **Indicates Congregation standing**